RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 183 ஜூலை.9 2026 வியாழக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# தமிழகத்தில் எம்பிபிஎஸ் மாணவர் சேர்க்கை இடங்கள் பறிபோகும் சூழல் உருவானது ஏன்?

## அமைச்சர் அருண்ராஜ் விளக்கம்

சென்னை: ஜூலை.9-

“மாநில அரசின் ஒப்புதல் இல்லாமலேயே 4 மருத்துவ கல்லூரிகள் நிகர்நிலை பல்கலைக்கழக அந்தஸ்தை பெற்றுள்ளன. அந்த கல்லூரிகள் எந்த கட்சியைச் சேர்ந்தவை என அனைவருக்கும் தெரியும். சமூக நீதியை பேசும் திமுக, அதிமுக கட்சிகள் இதற்கு பதில் சொல்ல வேண்டும்” என அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 6 தனியார் மருத்துவக் கல்லூரிகள் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களாக மாற்றப்படுவதால் அரசு ஒதுக்கீட்டுக்கு கிடைக்க வேண்டிய 700 எம்.பி.பி.எஸ் மாணவர் சேர்க்கை இடங்கள் பறிபோகும் நிலை உருவாகியுள்ளது என சர்ச்சை கிளம்பியுள்ளது.

இந்நிலையில் இது குறித்து அமைச்சர் அருண்ராஜ் செய்தியாளர்களிடம் பேசுகையில், “தமிழ்நாட்டில் 4 தனியார் மருத்துவக் கல்லூரிகள் நிகர்நிலை பல்கலைக்கழகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. நிகர்நிலை பல்கலைக் கழகங்களாக தரம் உயர்த்த அனுமதி கோரி தனியார் மருத்துவக் கல்லூரிகள் தமிழ்நாடு அரசை அணுகின. தாமதமாக என்ஓசியை மறுத்த காரணத்தினால் தனியார் மருத்துவக் கல்லூரிகள் உயர் நீதிமன்றம் சென்று அனுமதி பெற்றன.

பெரம்பலூரைச் சேர்ந்த 2 தனியார் மருத்துவக் கல்லூரிகள் தமிழக அரசை அணுகாமலேயே



நிகர்நிலை பல்கலைக் கழகங்கள் ஆகியுள்ளன. நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் இட ஒதுக்கீட்டை பின்பற்றாமல் மாணவர் சேர்க்கை நடத்த முடியும்.

தனியார் கல்லூரிகள் நிகர்நிலை பல்கலைக்கழக அந்தஸ்து பெற்றால், இட ஒதுக்கீட்டை பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை. அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7.5% இட ஒதுக்கீடும் பின்பற்றப்படாது. இது குறித்து சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்து வருகிறோம்.

இது குறித்து மத்திய அரசிடமும் தமிழக அரசு சார்பில் மேல்முறையீடு செய்ய உள்ளோம். இதற்கு நிரந்தர தீர்வு கல்வி, மருத்துவத்தை மாநில பட்டியலுக்கு கொண்டு வருவதே.

அந்த கல்லூரிகள் எந்த கட்சியைச் சார்ந்தவை என்பது எல்லோருக்கும் தெரியும். சமூக நீதி பேசும் திமுக, அதிமுக பதில் சொல்ல வேண்டும்.

கடந்த திமுக ஆட்சியில் தனியார் கல்லூரிகளுக்கு விதிகளை மீறி தடையில்லா சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. தற்போது நாம், 461 இடங்களை ஒதுக்கும் நிலை உருவாகியுள்ளது.

இதுபோல மாநில அரசு அனுமதியின்றி அந்தஸ்து கிடைத்தால் தமிழக மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படும். இது குறித்து மத்திய அரசிடமும் தமிழக அரசு சார்பில் முறையீடு செய்ய உள்ளோம். ” என்றார்.

‘நலம் ஏ.ஐ’ செயலி அறிமுகம்

அரசு மருத்துவமனைகளில் வாட்ஸ் அப் மூலம் ஓபி சீட்டு பெறும் சேவை முதற்கட்ட ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் தொடங்கப்பட்டுள்ளது. ‘நலம் ஏ.ஐ’ என்ற பெயரில் வாட்ஸ் அப் சேட்பாட் சேவையை அமைச்சர் அறிமுகம் செய்து வைத்தார்/

வாட்ஸ்அப் மூலம் அரசு மருத்துவமனைகளுக்கான ஓபி சீட்டு பெறலாம். அதாவது, வாட்ஸ் அப்பில் 96192 22999 என்ற எண்ணிற்கு ‘ஹாய்’ என மெசேஜ் அனுப்பி ‘நலம் ஏ.ஐ’ சேவையை பெற முடியும். தற்போது, முதற்கட்டமாக 22 மாவட்டங்களில் 'நலம் ஏ.ஐ' சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

செல்போன் இல்லாதவர்கள் நேரடியாக வந்து வழக்கம் போல முன்பதிவு சீட்டுகளை பெறலாம். இ சேவை மையங்கள் மூலமாகவும் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு முன்பதிவு செய்ய முடியும்.

ராஜீவ்காந்தி மருத்துவ மனையில் நெஞ்சகப் பிரிவு மருத்துவரை அணுகவும் சோதனை அடிப்படையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மருத்துவரின் மருந்துசீட்டு, ஆய்வக அறிக்கையை இணைய வழியிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

## அமைச்சரவை அமைக்காவிட்டால் புதுச்சேரியை காப்பாற்றுவது கடினம்; த.வெ.க., நிர்வாகி சாடல்

புதுச்சேரி, ஜூலை.09-

அமைச்சரவை அமைக்கா விட்டால் புதுச்சேரியை காப்பாற் றுவது கடினம் என முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் தமிழக வெற்றிக் கழக நிர்வாகியுமான ஜோ. பிரகாஷ் குமார் சாடியுள்ளார்.

புதுச்சேரியில் 2021ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் முத்தியால்பேட்டை தொகுதியில் சுயேச்சை யாக போட்டியிட்டு வெற்றிபெற்று சட்டமன்ற உறுப்பினராக பதவி வகித்தவர் ஜோ. பிரகாஷ் குமார். இவர் தமிழக வெற்றிக் கழகம் கட்சி தொடங்கிய பிறகு அதில் இணைந்து பணியாற்றி வருகிறார். 2026ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் அதே தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் வி. மணிமாறன் என்பவரை எதிர்த்து போட்டியிட்டு தோல்வியை தழுவினார்.

இந்நிலையில் செவ்வாய்க் கிழமை (ஜூலை 7) மாலை புதுச்சேரி துணைநிலை ஆளுநரை சந்தித்த ஜோ. பிரகாஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி



மேம்பாட்டு (MLA LAD) நிதியில் கட்டப்பட்டுள்ள நவீன உடற்பயிற்சி மையம் மற்றும் உள்விளையாட்டு இறகுப்பந்து அரங்கை நியமன முறையில் ஒதுக்க முயற்சி நடைபெறுவதாக குற்றம்சாட்டி, அதைத் தடுத்து வெளிப்படையான மின் ஏலம் (E-Auction) மூலம் மட்டுமே ஒதுக்க நடவடிக்கை எடுக்கக் கோரி மனு அளித்தார்.

அந்த மனுவில், ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட இந்த பொதுச்சொத்து பல மாதங்களாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்படாமல் பூட்டியே இருப்பதாகவும், மின் ஏலம் நடத்த வேண்டிய நிலையில் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அந்த பொதுச்சொத்தானது நியமன முறையில் ஒரு குறிப்பிட்ட குழுவிற்கு ஒதுக்க முயற்சிகள் நடைபெறுவதாகவும், இது வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாட்சிக்கு எதிரானது என்றும் தெரி வித்துள்ளார். அதனால், உடனடியாக மின் ஏலம் நடத்துவதுடன், காலதாமதம் குறித்து விசாரணை நடத்தி சம்பந்தப் பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

ஆளுநரிடம் மனு அளித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரகாஷ் குமார், புதுச்சேரியில் இன்னும் அமைச்சரவை அமைக்கப்படாததால் நிர்வாகம் முடங்கி யுள்ளதாக குற்றம் சாட்டினார்.

மேலும், தற்போது அதிகாரம் யாரிடம் உள்ளதோ அவர்களிடமே இந்த மனுவை வழங்கியுள்ள தாக தெரிவித்த அவர், “அமைச்சரவையை அமைக்காமல் இந்த நிலை நீடித்தால் புதுச்சேரியை காப்பாற்றுவது மிகவும் கடினம். மக்கள் நலன் கருதி அரசு உடனடியாக அமைச்சரவையை அமைத்து நிர்வாகத்தை சீர்படுத்த வேண்டும்" என்றும் அரசை கடுமை யாக விமர்சித்தார்.



■ சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டம், நாட்டரசன் கோட்டை உள்வட்டத்திற்குட்பட்ட, கொல்லங்குடி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், மாவட்ட ஆட்சியர் .ப.ஆகாஷ், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு பல்வேறு வகையான உதவி உபகரணங்களை வழங்கினார்..

## மதுரை எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி ஆகஸ்டில் திறப்பு? : 90% பணிகள் நிறைவடைந்ததால் தீவிரம்

மதுரை, ஜூலை.09-

எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியின் வகுப்பறைகள், ஆய்வகங்கள், விடுதிகள் உள்ளிட்ட முதற்கட்ட கட்டிடப் பணிகள் 90 சதவீதம் நிறைவடைந்துள்ள நிலையில், வரும் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் மருத்துவக் கல்லூரி வளாகம் அதிகாரப்பூர்வமாகத் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையொட்டி இரவு, பகலாக கட்டுமானப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மதுரை மாவட்டம் தோப்பூரை அடுத்த கோ.புதுப்பட்டியில் 220 ஏக்கர் பரப்பளவில், ரூ.2,021.51 கோடி மதிப்பீட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி மற்றும் விடுதிக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஜப்பான் நாட்டின் ஜைக்கா (யிமிசிகி) நிறுவனத்தின் நிதியுதவியுடன் கடந்த 2024ம் ஆண்டு மே 22ம் தேதி கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டன.

மொத்த திட்டப் பணிகளையும்



33 மாதங்களுக்குள், அதாவது 2027ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குள் நிறைவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக மருத்துவக் கல்லூரி, மாணவர் விடுதிகள், ஆய்வகங்கள் மற்றும் வெளி நோயாளிகள் பிரிவு (OPD) கட்டிடங்கள் அமைக்கப் பட்டு வருகின்றன. இரண்டாம் கட்டமாக உள் நோயாளிகள் சிகிச்சைக்கான முதன்மை மருத்துவமனைக் கட்டிடங்கள் கட்டப் படவுள்ளன.

மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி, விடுதிகள், குடியிருப்புகள், கூட்ட அரங்கம் உள்ளிட்ட மொத்தம் 24 கட்டிடங்கள் இந்த வளாகத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன. உலகத் தரநிலைகளுக்கு ஏற்ப நவீன மருத்துவ வசதிகளுடன், நீடித்த நிலைத் தன்மையை கருத்தில் கொண்டு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையில் மொத்தம் 900 படுக்கை வசதிகள் அமைக்கப்பட உள்ளன. இதில் தொற்று நோய் சிகிச்சைக்காக மட்டும் 150 படுக்கைகள் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும், 750 இருக்கைகள் கொண்ட நவீன கூட்ட அரங்கம், விளையாட்டுத் திடல், மாணவர் விடுதிகள் மற்றும் குடியிருப்புகள் ஆகியவற்றின் பணிகளும் நிறைவடையும் நிலையில் உள்ளன.

தற்போது மதுரை எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி, ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு, நான்காம் ஆண்டு மாணவர்கள் தோப்பூரில் கட்டி முடிக்கப்பட்ட விடுதியில் தங்க வைக்கப்பட்டு, மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் மருத்துவப் பயிற்சி பெற்று வருகின்றனர். மாணவர்களின் தற்போதைய விடுமுறை முடிந்த பிறகு, அவர்கள் நேரடியாக மதுரை தோப்பூரில் அமைந்துள்ள புதிய எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் பயிலும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கல்லூரி மற்றும் விடுதி கட்டிடப் பணிகள் 90 சதவீதம் நிறைவடைந்துள்ள நிலையில், மீதமுள்ள பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதையடுத்து, ஆகஸ்ட் இறுதி அல்லது செப்டம்பர் முதல் வாரத்தில் மருத்துவக் கல்லூரி வகுப்புகள் புதிய வளாகத்தில் முழுமையாகத் தொடங்கப்படும் என்றும், ஆகஸ்ட் மாதத்திலேயே எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி வளாகம் அதிகாரப்பூர்வமாகத் திறக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ‘உங்களில் ஒருவன் நான்’ பெண் தொழிலாளர்களுடன் தரையில் அமர்ந்து குறைகளைக் கேட்ட அமைச்சர் என். ஆனந்த்

விழுப்புரம், ஜூலை.09-

விபி ஜி ராம் ஜி திட்டத்தின் பெண் தொழிலாளர்களுடன் அமைச்சர் என். ஆனந்த், ஒன்றாக தரையில் அமர்ந்து கலந்துரையாடி அவர்களின் குறைகளை கேட்டறிந்தார்.

விழுப்புரம் மாவட் டத்தில் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் மற்றும் தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் என்.ஆனந்த் ஆகியவர்கள் நேற்று விழுப்புரம், விக்கிரவாண்டி, கெடார், காணை ஆகிய இடங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

விக்கிரவாண்டியில் நேரடியாக கள ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் என்.ஆனந்த், விபி ஜி ராம் ஜி திட்டத்தின் கீழ் அப்பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த பெண் தொழிலாளர்களை சந்தித்து, அவர்களுடன்



சாலை ஓரத்தில் ஒன்றாக அமர்ந்து பேசினார்.

அவர்களின் பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகளை கேட்டறிந்த அமைச்சர், அவற்றுக்கான நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். த.வெ.க அமைச்சரின் இந்த எளிமையான அணுமுறை அங்கிருப்பவர்கள் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

அதனைத்தொடர்ந்து, வெங்கந்தூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் அமைச்சர் என். ஆனந்த் ஆய்வு மேற்கொண்டார். அங்கு மாணவர்களுடன் கலந்துரையாடிய அவர், பென்சில், ஸ்கேல், ரப்பர் உள்ளிட்ட தேவையான உபகரணங்களை வழங்கி னார். மேலும், பள்ளி முடிந்து வேனில் புறப்பட்ட மாணவர்களுக்கும் சாக்லேட்டுகளை வழங்கி மகிழ்வித்தார்.

பள்ளியை தொடர்ந்து, வெளியில் குடிநீர் குழாயில் குடத்தில் நீர் பிடித்து கொண்டிருந்த பெண்ணிடம், குடிநீர் வாங்கி பருகினார். பின்னர், வீரமூர் பகுதியில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலில் சாமி தரிசனம் செய்த அவர், அங்கு அமைந்துள்ள நெகிழி கழிவு அரைக்கும் மையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, அங்கு வேலை செய்துக்கொண்டிருந்த தூய்மை பணியாளர்களை சந்தித்து பேசினார். அவர்களுடன் ஒன்றாக தரையில் அமர்ந்து பேசிய அவரிடம், மாத ஊதியத்தை இடைத்தரர்கள் இன்றி நேரடியாக வழங்க வேண்டும் என தூய்மைப் பணியாளர்கள் கோரிக்கை வைத்தனர்.

அதனை கேட்டறிந்த அமைச்சர் அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துடன், தூய்மைப் பணியாளர் களுக்கு அரசு சார்பில் தலா ரூ. 50,000 கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அவர்களுக்கு தனி மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்றும் தெரி வித்தார்.

மேலும், இதுவரை நலவாரியத்தில் பதிவு செய்யாதவர்களுக்கு உடனடியாக பதிவு செய்ய தேவையான ஏற்பாடுகள் செய்து தரப்படும் என உறுதியளித்தார். இவர்களை தொடர்ந்து, தென்னமாதேவி பகுதியில் களிமண்ணால் அழகு சாதனப் பொருட்கள் மற்றும் சுடுமண் பொம்மைகள் தயாரிக்கும் மகளிர் சுய உதவிக்குழுவினரை சந்தித்து அவர்களின் பணிகளை பார்வை யிட்டார்.

இறுதியாக, விழுப்புரம் ஆட்சியர் அலுவலகம் அருகே புதிதாக அமைக்கப்பட்ட 'டர்ஃப்' கிரிக்கெட் மைதானத்தை திறந்த வைத்த அவர், மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மானும் கிரிக்கெட் விளையாடி மகிழ்ந்தார்.



## முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு உதகை இளைப்பாறுதல் மையத்தில் ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள்

உதகை, ஜூலை.9-

முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு, உதகை கிழக்கு நகர கழக சார்பில், நகர செயலாளர் எஸ்.ஜார்ஜ் தலைமையில்,மாவட்ட கழக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம். ராஜூ முன்னிலையில் உதகை இளைப்பாறுதல் மையத்தில் உள்ள ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. கழக துணை செயலாளரும் நீலகிரி பாராளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார். மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், தம்பி இஸ்மாயில், பொதுக்குழு உறுப்பினர் வாணிஸ்வரி, உதகை தெற்கு மேற்கு ஒன்றிய செயலாளர் ஜெகதீசன் ஆகியோர் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர்.

## அலமாதி ஸ்ரீ செங்காளம்மன் ஆலயத்தில் தீமிதி திருவிழா



மாதவரம், ஜூலை.9-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் அலமாதி கிராமத்தில் பக்தர்களுக்கு அருள் பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ செங்காளம்மன் ஆலயத்தில் உலக மக்கள் நன்மைகள் வேண்டி 15ம் ஆண்டு சம்வஸ்சராபிஷேக பெருஞ்சாந்தி பெருவிழா மற்றும் 14ம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய ஸ்தாபகரும் நிரந்தர அறங்காவலருமான சக்தி அடியான் சரவணன் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் கோபூஜை, யாகவேள்வி, குங்குமம் அர்ச்சனை, சீர்வரிசைகள் எடுத்தல், கங்கைநீர் திரட்டுதல், காப்புகட்டுதல், கரகம் எடுத்தல், மஞ்சள்நீர் அபிஷேகம், பூச்சாரல், பால் அபிஷேகம், அக்னி கப்பறை எடுத்தல், பால்காவடி எடுத்தல், மஹா தீபாராதனை உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.பின்னர் காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். இத்திருவிழாவிற்கு ஆலய விழாக்குழு நிர்வாகிகள், உறுப்பினர்கள், அன்னதானக்குழு, கௌரவ ஆலோசகர்கள், தொண்டர்பணிக்குழு, மகளிர்க்குழு மற்றும் சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர். முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அல ங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலாநடைபெற்றது.





## தாம்பரம் தொகுதி வாக்காளர்களுக்கு அமைச்சர் சரத்குமார் நன்றி தெரிவித்தனர்

தாம்பரம், ஜூலை.9-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதியில், த.வெ.க., சார்பில் போட்டியிட்ட சரத்குமார் வெற்றி பெற்று எம்.எல்.ஏ.வானார். மேலும் மனிதவள மேலானதுறை அமைச்சராக பொறுப்பேற்றார். தனக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 69வது வார்டு பகுதி வட்ட செயலாளர் ஆர்.ஜெகன் ஏற்பாட்டில் பாரதியார் தெரு, கரிகாலன் தெரு, ஜகஜீவன்ராம் தெரு, காமராஜர் நகர், அண்ணா தெரு,உள்ளிட்ட பகுதிகளில் திறந்த வெளி ஜீப்பிலும், நடந்து சென்றும் நன்றி தெரிவித்தார். முன்னதாக அமைச்சருக்கு ஆரத்தி எடுத்து சிறப்பு சாமி தரிசனம் நடைபெற்றது மேலும் தங்கள் பகுதி குறைகளை மனுவாக அமைச்சரிடம் பொதுமக்கள் வழங்கினர் மனுவை பெற்றுக் கொண்ட அமைச்சர் கூடிய விரைவில் சரி செய்யப்படும் என்று வாக்குறுதி அளித்தார் இந்நிகழ்ச்சியில் பகுதி கழகச் செயலாளர் நாகராஜ்மாவட்ட செயற்குழு உருப்பினர் நித்திய மற்றும் மகளிர் அணி த.வெ.க உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

## உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில் நீலகிரி நாடளுமன்ற உறுப்பினர் தலைமையில் மாவட்ட அளவிலானவளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டம்



உதகை, ஜூலை.9-

நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, முன்னிலையில் நடைபெற்றது.இக் கூட்டத்தில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் , நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், தூய்மை இந்தியா திட்டம், பிரதான் மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், 15வது நிதிக்குழு மானியத்தின் கீழ் சுகாதார கட்டிடங்கள் கட்டுதல் ஆகிய திட்டங்களின் கீழ் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து சம்மந்தப்பட்ட துறைச் சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார். மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பேரூராட்சிகள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டம், தோட்டக்கலைத்துறை, சமூக பாதுகாப்புத்திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து அலுவலர்களிடம் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது:நீலகிரி மாவட்டத்தில், மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை விரைந்து முடிக்க உரிய அறிவுரைகள் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், நீலகிரி மாவட்டத்தின் வளர்ச்சிக்காகவும் மற்றும் பொதுமக்களின் அடிப்படை தேவைகளை முழுமையாக நிறைவேற்றிடும் வகையில் அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும் எனவும் மற்றும் நமது மாவட்டத்தை சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டத்தின் வளர்ச்சிக்காக உறுதுணையாக இருந்திட வேண்டும் எனவும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.இக்கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் போஜராஜன் (உதகை), திராவிடமணி (கூடலூர்), ராஜூ (குன்னூர்), கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் மாவட்ட வன அலுவலர்கள் (கூடலூர்) தேவராஜ் கஷாப்சசாங் ரவி (நீலகிரி கோட்டம்), துணை இயக்குநர் (முதுமலை புலிகள் காப்பகம்) வித்யாதர் பாளையவாரிய முதன்மை செயல் அலுவலர் துகினிகிண்டியா, நகர்மன்ற தலைவர்கள் வாணீஸ்வரி (உதகை), சுசீலா (குன்னூர்),ஜெயக்குமாரி (கோத்தகிரி), திருமதி. பரிமளா (கூடலூர்), சிவகாமி (நெல்லியாளம்), நகர்மன்ற துணைத்தலைவர் ரவிக்குமார் (உதகை), மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், உதவி இயக்குநர் (பேரூராட்சி) குருராஜன், நகராட்சி ஆணையாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



## செங்குன்றம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா

மாதவரம், ஜூலை,9-

மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சியில் உள்ள செங்குன்றம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் செங்குன்றம் மிசா. இரா.ஏழுமலை கல்வி அறக்கட்டளை சார்பில் 2025 2026 கல்வி ஆண்டில் சிறப்பான தேர்ச்சி விகிதம் கொடுத்து அர்ப்பணிப்புடன் பணியாற்றிய செங்குன்றம் கேபிசி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஓ ஆர் ஜி என் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் 80 பேருக்கு பாராட்டு விழா மிசா இரா. ஏழுமலை கல்வி அறக்கட்டளை தலைவர் இரா.ஏ.பாபு, செயலாளர் கலைவாணி பாபு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.முன்னதாக செங்குன்றம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் அமுதா அனைவரையும் வரவேற்றார். செங்குன்றம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கலைமணி, ஞாயிறு அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சாமிநாதன் செங்கு ன்றம் பேரூராட்சி துணைத்தலைவர் விப்ரநாராயணன், தனியார் பாலிடெக்னிக் செயலாளர் செல்வக்குமார், செங்குன்றம் லயன்ஸ் சங்க வட்டாரத் தலைவர் பவானிசங்கர், சங்கத் தலைவர் நந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக பொன்னேரி கல்வி மாவட்ட அலுவலர் அய்யப்பன், கல்வி ஆய்வாளர் பிரேம்குமார் ஆகியோர் கலந்து கொண்டு 80 ஆசிரியர்களுக்கு பொன்னாடை போர்த்தி கேடயம் வழங்கி கௌரவித்தனர்.இதில் பேரூராட்சி கவுன்சிலர் கோதண்டராமன் மற்றும் செல்வமணி, திராவிடமணி, செங்குன்றம் லயன்ஸ் சங்க நிர்வாகிகள் முனுசாமி, கோதண்டபாணி, சுகுமார், சந்திரசேகர், இளங்கோ, உதயகுமார், அன்பு, பார்த்திபன், சேக்கிழார், கண்ணன் உள்ளிட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




## சிறப்பு மனு முகாம் மூலம் பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது துரித நடவடிக்கை எடுத்து வரும் தேனி மாவட்ட காவல்துறையினர்

தேனி, ஜூலை.9-

தேனி மாவட்ட காவல் கண்கா ணிப்பாளர்K.S.பிரவீன் கௌதம், அவர்களின் உத்தரவின் பேரில் தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் காவல் அதிகாரிகள் சிறப்பு மனு முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது உரிய விசாரணை செய்து துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சிறப்பு மனு முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுத்து வரும் தேனி மாவட்ட காவல்துறையினரின் செயல் பொ துமக்கள் மத்தியில் காவல்துறை நண்பனாகவும், நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருப்பதாக பொதுமக்கள் தங்கள் நெஞ் சார்ந்த நன்றியை தெரிவித்து வருகின்றனர்.

## ஆசிரியர் சிறப்பு தகுதித் தேர்வில் குளறுபடி? - தேர்வு முடிவை நிறுத்தி மறுபரிசீலனை செய்ய தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் கோரிக்கை



தாம்பரம், ஜூலை.9-

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் அடுத்த பெருங்களத்தூரில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் அவசர ஆலோசனைக் கூட்டம், சங்கத் தலைவர் கு. தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த அவர், ஜூலை 4 மற்றும் 5 ஆம் தேதிகளில் நடைபெற்ற ஆசிரியர் சிறப்பு தகுதித் தேர்வு மிகவும் கடுமையான விதிமுறைகளுடன் நடத்தப்பட்டதாகவும், கேள்வித்தாளில் பல்வேறு குளறுபடிகள் இடம்பெற்றதாகவும் குற்றம்சாட்டினார்.

குறிப்பாக, ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடப்பிரிவைத் தாண்டி பொதுவான மற்றும் தொடர்பில்லாத பாடங்களில் இருந்து கேள்விகள் கேட்கப்பட்டதாகவும், பல ஆண்டுகளாக ஒரே பாடத்தை கற்பித்து வரும் ஆசிரியர்கள் இதனால் கடும் மனஅழுத்தத்திற்கும் சிரமத்திற்கும் உள்ளானதாகவும் அவர் தெரிவித்தார்.மேலும், இந்தத் தேர்வுக்காக ஆசிரியர்கள் விடுமுறை எடுத்து அனைத்து பாடங்களையும் படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அதன் பாதிப்பு மாணவர்களின் கல்வியில்தான் பிரதிபலிக்கும் என்றும் அவர் கவலை தெரிவித்தார்.எனவே, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் ஆகியோர் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை சந்தித்து, மாநிலங்களின் தனிப்பட்ட கல்வி முறைகளை கருத்தில் கொண்டு உரிய தீர்வு காண வலியுறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.மேற்கு வங்கம் உள்ளிட்ட சில மாநிலங்களில் நடைமுறையில் உள்ளதைப் போல, தனிப்பாட ஆசிரியர்களின் அனுபவம் மற்றும் கல்வித் தகுதிக்கு கூடுதல் மதிப்பெண்கள் வழங்க வேண்டும் என்றும், தவறான கேள்விகளுக்கு முழு மதிப்பெண் வழங்கி, தேர்வு முடிவுகளை மறுபரிசீலனை செய்து பின்னரே வெளியிட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், பள்ளிகளில் ஆய்வு மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கு உரிய அதிகாரம் இருந்தாலும், மாணவர்களை சங்கடப்படுத்தும் வகையில் சமூக வலைதளங்களில் பரவும் வீடியோக்கள் உருவாகும் சூழலை தவிர்க்க வேண்டும் என்றும், சமூக வலைதளப் பதிவாளர்கள் மாணவர்களின் முகத்தை மறைத்து, அவர்களின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்றும் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத் தலைவர் கு. தியாகராஜன் தெரிவித்தார்.



## மழை வேண்டியும், மத ஒற்றுமையை வலியுறுத்தியும் குரும்பட்டியில் மாரியம்மன் திருவிழா விமரிசையாக நடைபெற்றது

கிருஷ்ணகிரி, ஜூலை.9-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஒன்றியம், குண்டலபட்டி ஊராட்சிக்கு உட்பட்ட குரும்பட்டி கிராமத்தில் மழை வளம் பெருக வேண்டியும், மத ஒற்றுமையை வலியுறுத்தியும் மாரியம்மன் திருவிழா நேற்று விமரிசையாக நடைபெற்றது. திருவிழாவையொட்டி நடைபெற்ற கூழ் ஊற்றும் நிகழ்ச்சியில், ஏராளமான பெண்கள் பாரம்பரிய உடையில் ஊர்வலமாக கூழ் எடுத்துச் சென்று மாரியம்மனுக்கு படைத்து வழிபட்டனர். பின்னர் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது.இந்த விழாவில் கிராம மக்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து அனைவருக்கும் அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது. மேலும் இன்று அம்மனுக்கு மாவிளக்கு எடுக்கும் நிகழ்ச்சியும் வெகு சிறப்பாக நடைபெறுகிறது.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், சப்பானிப்பட்டியில் கிராமத்தில் செயல்பட்டு வரும் தனியார் மாங்கூழ் உற்பத்தி மையத்திலிருந்து கழிவுகள் வெளியேற்றப்படுவது குறித்து சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் டாக்டர்.வே.க.ராஜீவ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் பா.முகுந்தன், மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் M.புருஷோத்தமன் உள்ளிட்டபலர் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி நகராட்சி, பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ், 9 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் டாக்டர்.வே.க.ராஜீவ் நேரில் பார்வையிட்டு கழிவு நீர் சுத்தகரிப்பு செய்யப்பட்டு வெளியேற்றம் செய்யும் நீரின் தரத்தை ஆய்வு மேற்கொண்டார். உடன், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் பா.முகுந்தன், கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் சேகர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கம் ஒன்றியம், சிறுதாமூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர் அப்பள்ளியின் வளர்ச்சிக்காக பள்ளிக்கு தேவையான மாணவர்கள் அமரும் இருக்கைகள், மேசைகள் ஆகியவற்றை மாணவர்களின் தேவையை கருதி அன்பளிப்பாக வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாவட்ட ஆட்சியர் மருத்துவர் மு.வீரப்பன், ஒவ்வொருவரும் இதே போன்று தங்களுடைய பள்ளியின் வளர்ச்சிக்கு வழங்க முன்வர வேண்டுமென்று தெரிவித்தார். இந்நிகழ்ச்சியினை தொடர்ந்து சிறுதாமூர் ஊராட்சியில் பயணியர் நிழற்குடையையும், வடமணிப்பாக்கம் ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிட பணிகளையும், தின்னலூர் ஊராட்சியில் VB G RAM நி திட்ட பணிகளையும் மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்தார்.



■ விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு பேரூராட்சி 12 வது பகுதியில் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து பொதுமக்களிடமிருந்து சேகரிக்கும் பணியினை மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா ஆய்வு செய்தார்.

## தேனி மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கூட்டம் கண்காணிப்புக் குழுத்தலைவர் / தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் தலைமையில் நடைபெற்றது

தேனி, ஜூலை.9-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில்மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கூட்டம் கண்காணிப்புக் குழுத்தலைவர் / தேனி பாராளுமன்ற உறுப்பினர் .தங்க தமிழ்செல்வன் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், முன்னிலையில் நடைபெற்றது.மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கூட்டம், ஒன்றிய அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், மாநில அரசுடன் இணைந்து எவ்வாறு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதனை கண்காணித்து, அத்திட்டப் பணிகளை விரைந்து முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு நடத்தப்படுகிறது. இக்கூட்டத்தில், கண்காணிப்புக் குழுத்தலைவர்/தேனி பாராளுமன்ற உறுப்பினர் , உசிலம்பட்டி மற்றும் ஆண்டிப்பட்டி பகுதிக்கு சுற்றுச்சாலை அமைக்க முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், திண்டுக்கலிலிருந்து சபரிமலைக்கு ரயில் இயக்க மேற்கொள்ளும் திட்டம் குறித்தும் மற்றும் தேவாரம் சாக்கலூத்து மெட்டு சாலை வனப்பகுதிக்குட்பட்ட பகுதியில் நெடுஞ் சாலைத்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்து, தொடர்புடைய அலுவலர்கள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறைஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, பேரூராட்சிக ள்துறைதமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், நகராட்சி நிர்வாகம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலைத்துறை, முன்னோடி வங்கி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை, பள்ளிக் கல்வித்துறை, சமூக நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், கனிமவளத்துறை, தொழில் வணிகத்துறை, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதியின் கீழ் துறை ரீதியாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், அதன் விவரங்கள், நிதிநிலை மற்றும் செலவினங்கள் ஆகியன குறித்தும், நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் ஆகியன குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில், கண்காணிப்புக் குழுத்தலைவர் / தேனி பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். பின்னர், துறைசார்ந்த அலுவலர்கள் தங்கள் துறை ரீதியாக மேற்கொண்ட பணிகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள், தேவையான நிதி ஆதாரங்கள் ஆகியன தொடர்பாக ஆண்டறிக்கையின்படி விரிவாக எடுத்துரைத்தனர். அனைத்துத்துறை அலுவலர்களும் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்கள் பொதுமக்களிடையே சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும். மக்கள் நலனை கருத்தில் கொண்டு, அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும் என கண்காணிப்புக் குழுத்தலைவர்/ தேனி பாராளுமன்ற உறுப்பினர் .தங்க தமிழ்செல்வன் அவர்கள் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் .க.சபரி ஐங்கரன் (பெரியகுளம்), பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா (கம்பம்).ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி), கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி). ரஜத்பீடன்,துணை இயக்குநர் (ஸ்ரீ வில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம்) விவேக்குமார் பி. யாதவ்,மாவட்ட வன அலுவலர்.ஜி.கிரண், மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், உதவி வனப்பாதுகாவலர் .சாய்சரண் ரெட்டி,கூடுதல் காவல் கண்காணிப்பாளர் .கலைக்கதிரவன் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்



## மதுரை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம்

மதுரை, ஜூலை.9-

மதுரை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் பொதுமக்களிடமிருந்து மொத்தம் 47மனுக்கள் பெறப்பட்டன.பெறப்பட்ட மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு, சட்டப்படி தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாநகர காவல் ஆணையர் ராஜேந்திரன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.இந்த குறைதீர்க்கும் முகாமில் வடக்கு துணைக் காவல் ஆணையர் கார்த்திக், தெற்கு துணை காவல் ஆணையர் இனிக்கோ திவ்யன் மற்றும் தலைமையிட துணை காவல் ஆணையர்கள், போக்குவரத்து காவல் ஆணையர் வனிதா,காவல் உதவி ஆணையர்கள் உள்ளிட்ட காவல் துறை அதிகாரிகள் கலந்து கொண்டு, பொதுமக்களின் கோரிக்கைகள் மற்றும் குறைகளை நேரில் கேட்டறிந்தனர்.





■ கிருஷ்ணகிரி அணையில், அணைக்கு வரும் நீர் மற்றும் அணையிலிருந்து வெளியேறும் நீரின் தரத்தினை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் டாக்டர்.வே.க.ராஜீவ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் பா.முகுந்தன், நீர்வளத்துறை செயற்பொறியாளர் செந்தில் குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



## நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி, ஜூலை.9-

தேனி மாவட்ட காவல்துறையினர்.பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .K.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் இரவு நேரங்களில் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் செய்திக்குறிப்பு

தேனி, ஜூலை.9-

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் .செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது,இயற்கை சீற்றங்களால் ஏற்படும் பயிர் இழப்பிலிருந்து விவசாயிகளின் நலன் மற்றும் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி, 2026 2027 ஆம் ஆண்டில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தேனி மாவட்டத்தில் குறுவை பருவத்தில் மாவட்டத்தின் 8பிர்க்காக்கள், காரீப் பருவத்தில் 17 பிர்க்காக்கள், சம்பா பருவத்தில் 14 பிர்க்காக்கள் மற்றும் ராபி பருவத்தில் 7 பிர்க்காக்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை தேனி மாவட்டத்தில் KSHEMA GIC நிறுவனம் செயல்படுத்துகிறது. இதுவரை 652 எக்டர் பரப்பளவில் குறுவை நெற்பயிர் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது நிலவும் எல்நினோ நிகழ் வின்தாக்கத்தால்தென்மேற்கு பருவமழை இயல்பை விட குறைவாக இருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், குறுவை மற்றும் மானாவாரி பயிர்கள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. இதனை கருத்தில் கொண்டு, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில், 2026 குறுவைப் பருவத்தில் நெல், எள், நிலக்கடலை, மக்காச் சோளம், சோளம், துவரை, பருத்தி, ஆகிய 7 வேளாண் பயிர்களும் பிரதம மந்திரி பயிர்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தேனி மாவட்டத்தில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களை (25.06.2026 முதல்) விவசாயிகள் தேசிய பயிர்க் காப்பீட்டு இணையதளத்தில் காப்பீடு செய்து கொள்ளலாம். குறுவை நெற்பயிருக்கும், எள்ளுக்கும் தேனி மாவட்டத்தில் காப்பீடு செய்வதற்கு 2026 ஜூலை 31ஆம் தேதி (31/07/2026) வரை காப்பீடு செய்து கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ் பரிந்துரையின்படி மகசூல் இழப்பு, விதைப்பு / நடவு செய்ய இயலாத நிலை, விதைப்பு / நடவு பொய்த்தல், பகுதிசார்ந்த மற்றும் பயிர் வளர்ச்சி கால இடர்நிகழ்வுகளால் ஏற்படும் இழப்பு மற்றும்அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பு போன்ற இனங்கள் காப்பீடு செய்யப்படுகின்றன.

எனவே, கடன் பெறும் விவசாயிகள் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களை தொடக்க வேளாண்மை கடன் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் காப்பீடு செய்து கொள்ளலாம். கடன் பெறாத விவசாயிகள் பொது சேவை மையங்கள் (இசேவை மையங்கள்) அல்லது தேசிய பயிர்க் காப்பீட்டு இணையதளத்தில் உள்ள "விவசாயிகள் கார்னர்"வாயிலாக நேரடியாகவும் பதிவு செய்துகொள்ளலாம். காப்பீடுசெய்வதற்கான இறுதித் தேதி 31.07.2026 எனவும் இக்காலக்கெடு எக்காரணத்திற் காகவும்,நீட்டிக்க படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும்போது முன்மொழிவுவிண்ணப்பத்துடன், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல் / விதைப்பு அறிக்கை,வங்கிக் கணக்குப்புத்தகத்தின் (Bank Pass Book) முதல் பக்க நகல், ஆதார் அட்டை (Aadhar Card) நகல் ஆகியவற்றை இணைத்து,கட்டணத் தொகையை செலுத்தியப்பின் அதற்கானஇரசீதையும் பெற்றுக் கொண்டு, அதில் தாங்கள் காப்பீடு செய்த பயிர் மற்றும் கிராமம் /குறுவட்டம் உள்ளிட்ட விவரங்கள் சரியாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய அறிவுறுத்தப்படுகிறது.மேலும், விபரங்களுக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநரையோ, வேளாண்மை அலுவலரையோ, உதவி வேளாண்மை அலுவலரையோ, வங்கி கிளைகளையோ அணுகி பயிர்களைக் காப்பீடு செய்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் . தெரிவித்துள்ளார்.






■ திருப்பூர் மாவட்டம் வேலம்பாளையம் , போக்குவரத்து நெரிசல்களையும், விபத்துகளையும், தவிர்க்க. மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த, திருப்பூர் மாவட்ட போக்குவரத்து காவல்துறையினரும். மற்றும், நாட்டு நல பணி திட்டம், இரு அணிகளும் சேர்ந்து, பொது மக்களுக்கு போக்குவரத்து விதிகளை மதித்து செயல்பட வேண்டும் என்றும் இரு சக்கர வாகனங்களில் செல்லுபவர் இருவரும் தலைக்கவசம் அணிய வேண்டும் என்றும். நான்கு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் சீட் பெல்ட் அணிந்து செல்ல வேண்டும். மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, நாட்டு நல பணி திட்டம் இதில் உள்ள மாணவிகளும் மற்றும் காவல்துறை யினரும். இணைந்து மக்களுக்கு புரியும்படி விழிப்புணர்வு ஏற்படும் படி பதாகைகளை கையில் ஏந்தி ஊர்வலமாக சென்றனர். பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும். வரவேற்பு தெரிவித்தனர்.



# கொல்லங்குடி மக்கள் தொடர்பு முகாமில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெற்ற மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ்

சிவகங்கை, ஜூலை.9-

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டம், நாட்டரசன் கோட்டை உள்வட்டத்திற்குட்பட்ட கொல்லங்குடி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், மாவட்டஆட்சியர் ப.ஆகாஷ் நேற்று (08.07.2026) கலந்து கொண்டார்.முகாமில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை நேரில் பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சியர், ஒவ்வொரு மனுவின் கோரிக்கைகளையும் கேட்டறிந்து, தகுந்த நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.மக்கள் தொடர்பு முகாமில் அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.




# திருப்பூர் மாவட்டத்தில் யங் இந்தியன்ஸ் பாராளுமன்றம் நிகழ்ச்சியை ஆட்சியாளர் மனிஷ் நாரணவரே துவக்கி வைத்தார்

திருப்பூர், ஜூலை.9-

திருப்பூர்.மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் திருப்பூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் வி. சத்தியபாமா முன்னிலையில் இந்திய தொழில்துறை கூட்டமைப்பின் இளைஞர் அமைப்பான யங் இந்தியன்ஸ் பாராளுமன்றம் 2026 நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்கள் திருப்பூரில் முதல் முறையாக நடைபெற்ற யங் இந்தியன்ஸ் பாராளுமன்றம் 2026 - மாணவர்களுக்கு ஜனநாயக அனுபவத்தை உருவாக்கிய யங் இந்தியன்ஸ் இந்திய தொழில்துறை கூட்டமைப்பு (CII)யின் இளைஞர் அமைப்பான யங் இந்தியன்ஸ் (Young Indians) - திருப்பூர் கிளை, திருப்பூரில் முதல் முறையாக யங் இந்தியன்ஸ் பாராளுமன்றம் (Young Indians Parliament - YIP) 2026 நிகழ்ச்சி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.



■ மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசு கல்லூரி மாணவியர்களுக்கான சமூகநீதி விடுதியில்மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., இன்று நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.இந்த ஆய்வின்போது, விடுதியில் உள்ள சமையலறை, உணவருந்தும் அறை மற்றும் பொருள் இருப்பு அறை ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்து விடுதியில் தங்கியுள்ள மாணவியர்களிடம் அவர்களின் தேவைகள், விடுதியில் செய்யப்பட்டுள்ள அடிப்படை வசதிகள், வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் உணவு உரிய நேரத்தில் வழங்கப்படுகிறதா என்பது குறித்து கேட்டறிந்தார்

# சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 4 வடமாநில மனநல நோயாளிகள் குடும்பத்துடன் இணைய அரசு சாரா நிறுவனத்திடம் ஒப்படைப்பு



சிவகங்கை, ஜூலை.9-

சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வரும் மனநலத் துறையின் அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையத்தில் சிகிச்சை பெற்று வந்த 4 வடமாநில மனநல நோயாளிகள், குடும்பத்துடன் மீண்டும் இணைக்கும் நடவடிக்கைக்காக மும்பையைச் சேர்ந்த அரசு சாரா நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சிவகங்கை மாவட்டத்தின் ஒக்கூர் மற்றும் திருப்பத்தூர் பகுதிகளில் ஆதரவின்றி சுற்றித் திரிந்த மனநலம் பாதிக்கப்பட்ட 60, 50, 30 மற்றும் 28 வயதுடைய 4 வடமாநிலத்தவர்கள் மீட்கப்பட்டு, கடந்த ஒன்றரை முதல் இரண்டு ஆண்டுகளாக இம்மையத்தில் இலவச உணவு, தங்குமிடம் மற்றும் மருத்துவ சிகிச்சையுடன் பராமரிக்கப்பட்டு வந்தனர். தொடர் சிகிச்சையால் அவர்களின் உடல்நிலை மற்றும் மனநிலை மேம்பட்டதைத் தொடர்ந்து, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மும்பையைச் சேர்ந்த அரசு சாரா நிறுவனத்திடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர். அங்கிருந்து அவர்களின் குடும்பத்தினருடன் மீண்டும் இணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பழக்கமான குடும்பச் சூழலில் இருப்பது நோயிலிருந்து விரைவில் முழுமையாக மீள உதவும் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்த ஏற்பாடுகளை செய்த அரசு சிவகங்கை மருத்துவக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் டாக்டர் செல்வராஜனுக்கு மனநலத் துறை சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது. முதல்வர் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் தமிழ்வாணன், துணை முதல்வர் டாக்டர் விசாலாட்சி, நிலைய மருத்துவர் டாக்டர் முகமது ரபி, துணை நிலைய மருத்துவர்கள் டாக்டர் தென்றல், டாக்டர் வெங்கடேஷ், மனநலத் துறைத் தலைவர் டாக்டர் ராஜசுந்தரி, உதவி பேராசிரியர் டாக்டர் அனிதா பாய் மற்றும் அரசு சாரா நிறுவனத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் "Coffee With Collector" என்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் அரசு பள்ளிகளில் 6 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு நடைபெற்ற ஆங்கில விவாதப்போட்டியில் வெற்றி பெற்ற மாணாக்கர்களுடன் கலந்துரையாடினார்கள். உடன் உதவி திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த பள்ளி கல்வி) அண்ணாதுரை உள்ளார்.



■ மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சி வார்டு எண் 20இல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் தூய்மை இந்தியா இயக்கம் திட்டத்தின் கீழ் ரூபாய் 8.37 கோடி மதிப்பீட்டில் 40 லட்சம் லிட்டர் திறன் கொண்ட புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு வரும் மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணாபணியினை பார்வையிட்டார். மேலூர் நகராட்சி பொறியாளர் முத்துக்குமார் மற்றும் ஊழியர்கள் உடனிருந்தனர்.



# ஆக்கிரமிப்புகள் அகற்ற உத்தரவு: பிளாஸ்டிக் பயன்பாட்டுக்கு ரூ.11,200 அபராதம் - மதுரை மாநகராட்சி ஆணையாளர் அதிரடி ஆய்வு

மதுரை, ஜூலை.9-

மதுரை மாநகராட்சி மண்டலம் 4இல் தெற்கு மேல அனுப்பானடி பகுதியில் ஆக்கிரமிப்புகள், முல்லைப்பெரியாறு கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் தூய்மை பணிகள் குறித்து மாநகராட்சி ஆணையாளர் திரு. கௌரவ் குமார், இ.ஆ.ப., நேரில் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த டீக்கடைகள், வணிகக் கடைகளின் ஆக்கிரமிப்புகள், மரச்சாமான்கள், கதவுகள், ஜன்னல்கள் உள்ளிட்ட பொருட்களை உடனடியாக அகற்ற அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.தொடர்ந்து கேட்லாக் ரோடு மற்றும் தமிழ்நாடு ஹவுசிங் போர்டு காலனியில் உள்ள கடைகளில் ஆய்வு மேற்கொண்ட அவர், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தவோ, விற்பனை செய்யவோ கூடாது என வணிகர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். விதிமீறிய



கடைகளுக்கு மொத்தம் ரூ.11,200 அபராதம் விதிக்கப்பட்டது.மேலும், முல்லைப்பெரியாறு கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு வழங்கப்படும் குடிநீர் விநியோகத்தை ஆய்வு செய்த ஆணையாளர், குழாய்களில் கசிவு ஏற்படாத வகையில் பராமரித்து சீரான குடிநீர் வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். குடிநீரை வீணாக்காமல் சிக்கனமாக பயன்படுத்துமாறும் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார். பின்னர் தவிட்டுசந்தை வார்டு சுகாதார அலுவலகத்தில் வருகைப் பதிவேடுகளை ஆய்வு செய்த அவர், கிருதுமால் நதி சாலை, தெற்குவாசல் மற்றும் பிள்ளையார் பாளையம் சாலை பகுதிகளில் நடைபெற்று வரும் தூய்மை பணிகளையும் பார்வையிட்டார்.இதையடுத்து மண்டலம் 5இல் மேற்கு சுப்பிரமணியபுரம் பகுதியில் நிறைவடைந்த தார்சாலை மற்றும் பேவர் பிளாக் சாலைப் பணிகளையும் ஆய்வு செய்தார்.இந்த ஆய்வில் உதவி செயற்பொறியாளர்கள் இந்திராதேவி, பாலமுருகன், உதவிப் பொறியாளர்கள் நாகராஜன், மாரியப்பன், சுகாதார ஆய்வாளர் சூர்யா உள்ளிட்ட மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# "திருமாவளவன் கருத்துக்கு நோபல் பரிசு கொடுக்கலாம்" : வைகோ கிண்டல்

கோவில்பட்டி: ஜூலை.9-

கோவில்பட்டியில் செய்தியாளர்களிடம் பேசிய வைகோ, "கட்டிடம் கட்ட லஞ்சம், தொழிற்சாலை அமைக்க லஞ்சம், ஆயா வேலைக்கு லஞ்சம், கல்லூரிகளில் லஞ்சம் என தமிழகத்தில் புரையோடியிருந்த ஊழல்,கமிஷன், லஞ்சம் ஆகியவற்றை முதல்வர் விஜய் நீக்கியிருக்கிறார். கமிஷன், கரப்ஷன், கலெக்ஷன் இல்லாத ஆட்சியை விஜய் நடத்திக் கொண்டிருக்கிறார்.

தவெக ஆட்சியில் இருக்கக் கூடாது என திமுக நினைக்கிறது. அந்த எண்ணம் ஒரு போதும் பலிக்காது. ஒருவேளை மீண்டும் தேர்தல் நடந்தால் 180க்கும் மேற்பட்ட இடங்களில் தவெக வெல்லும்.

விவசாயிகள் இப்போது பயிர்க்கடனுக்காக போராடுகிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவர்களின் கோரிக்கையை முதல்வர் விஜய் நிறைவேற்றுவார்" என்றார்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்கள், தவெக அமைச்சரவையில் விசிக பங்கேற்று இருந்தாலும், திமுக தலைவர் ஸ்டாலினுடன் கருத்து பங்கேற்பு தொடர்ந்து கொண்டே இருக்கும், தவிர்க்க மாட்டேன் என திருமாவளவன் பேசியது குறித்து கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த வைகோ, " இது நோபல் பரிசு கொடுக்கப்பட வேண்டிய கருத்து" என கிண்டலாக பதிலளித்தார்.

**வருவாய் கோட்டாட்சியர் சிவகங்கை**
**ந.க.பி.1/526/2026**

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை டவுன், க/எண்:14/2இ2 மீனாட்சி நகர், சாஸ்திரி தெரு என்ற முகவரியில் வசித்து வரும் திரு. போஸ் (த /பெ. அழகர்சாமி) என்பவரின் தயார் லேட். ராஜம்மாள்(க /பெ.அழகர்சாமி ) என்பவர் கடந்த 03.08.2022 அன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். அன்றைய சூழ்நிலையில் மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக் கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம்.அவ்வாறு ஆட்சேபனை ஏதும் வரப் பெறவில்லையெனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறு இறப்பினை பதிவு செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மனுதாரர்
திரு.போஸ்
த.பெ.அழகர்சாமி
கதவு எண் 14/2இ2
மீனாட்சி நகர்
சாஸ்திரி தெரு,
சிவகங்கை மாவட்டம்
செல்: 9790309647

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161